# சின்னச் சின்னப் பாட்டு



ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னச் சின்னப் பாட்டு

## சிறுவர் பாடல்கள்

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : சின்னச் சின்னப் பாட்டு

நூலின் வகை : சிறுவர் இலக்கியம்

ஆசிரியர் : ச. அருளானந்தம்

உரிமை : ஆசிரியருக்கு

அட்டைப்படம் ஓவியம் : ச. அ. அருள்பாஸ்கரன்

எழுத்தமைப்பு : நிரஞ்சனா கைலாசன்

முதற்பதிப்பு : 01.01.2000.

வெளியீடு : அருள் வெளியீடு
37/7, மத்திய வீதி
உவர்மலை
திருகோணமலை.

விலை : 40 ரூபா.

படையல்

திருகோணமலை மாவட்டத்தில் சிறப்பாக ஆலங்கேணிக் கிராமத்தில் கல்விப் பயிர்வளர வித்திட்ட பேராசான் திரு. சுப்பிரியான் பெர்ணார்ந்து அவர்களுக்கு இந்நூல்
படையல். ஆ-ர்.

இந்நூல் திருகோணமலை உப்புவெளியிலுள்ள சிவானந்த தபோவன சிறார்களின் கல்வி நலனுக்கு உதவும் நோக்குடன் வெளிவருகின்றது. ஆ-ர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

பள்ளிச் சிறுவர்களுக்கான பாடல்களை இயற்றுவதில் வல்லவர் கவிஞர் திரு.ச.அருளானந்தம். ஏற்கனவே அவர் இயற்றி வெளிவந்த பாடல்கள் சிறுவர்களின் மனதில் புத்துணர்ச்சியையும் புது மகிழ்ச்சியையும் ஏற்படுத்துவதோடு, வேகமாக சிந்திக்கவும் செயற்படவும் வைத்துக்கொண்டு இருப்பதை எல்லோரும் நன்கு அறிவோம். பொதுவாக கவிதைகளை படிக்கும் பொழுது நல்ல சிந்தனைகள் தோன்ற வேண்டும். அவை ஆழமாக மனதில் பதிய வேண்டும் அந்த சிந்தனைகள் உள்ளத்தைப் பண்படுத்தத் தக்கதாகவும் உயர்ந்த வாழ்க்கைக்கு வழிகாட்டும் உன்னதமான கருத்துக்களாகவும் அமைதல் அவசியம். அவ்வகையில் பாடல்களை எழுதி வருபவர் திரு.ச.அருளானந்தம் அவர்கள். அவரது பாடல்களில் குழந்தைகளின் நெஞ்சில் நிலைத்து நிற்கவேண்டிய வரிகள் சில.

''உழைத்து வருவார் அப்பா -அன்பு<br>
ஊட்டி வளர்ப்பார் அம்மா''<br>
''சின்னச் சின்னக் கதைகள் -நிதம்<br>
சேர்த்துப் பாட்டி சொல்வார்''<br>
''சோம்பல் தன்னை விரட்டுவோம்<br>
சுழன்று சேவை செய்வோம்''

இவை மட்டுமல்ல கவிஞரின் எண்ணத்தில் எழுந்த சில ஆக்கங்களை படிக்கின்ற பொழுது மனதில் வண்ண வண்ண காட்சிகள் விரிகின்றது. அதற்கு உதாரணமாக

''பட்டம் கட்டி ஆடுவோம்''<br>
''ஆடிப்பாடுவோம்''<br>
''பள்ளி வாழ்க்கையில்''<br>
''சின்னச் சின்ன ரோசாவே''

போன்ற கவிதைகளை குறிப்பிடலாம். அநேகமாக எல்லாப் பாடல்களும் பாடுவதற்காக மட்டுமல்லாமல் சிறுவர்கள் ஆடிப்பாடுதற்கேற்ற பாடல்களாக அமைந்திருப்பதும் ஒரு சிறப்பம்சம் ஆகும்.

வளரும் சிறுவர்கள் தெரியவேண்டிய தொழில்நுட்பங்கள் பலப்பல. அவற்றையும் சிறுவர் இலக்கியத்துறையில் சாதனை படைத்த கவிஞர் அருளானந்தம் அழகிய பாடல்களாக தரவேண்டும். பாடசாலை மாணவர்கள் அவற்றைப் படிப்பதால் பரவசம் அடைய வேண்டும். பயனும் பெறவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

எஸ். தில்லைநடராஜா<br>
மேலதிகச் செயலாளர்

கல்வி உயர்கல்வி அமைச்சு<br>
இசுருபாய<br>
கொழும்பு

Digitized by Noolaham Foundation.<br>
noolaham.org | aavanaham.org

# எனது உரை

நமது சிறார்கள் மிக்க ஆர்வமுடையவர்கள். எதையும் அறிந்து கொள்ளும் ஆற்றல் உள்ளவர்கள். அவர்கள் வாழும் சூழல் புதுமைகள் நிறைந்தது. விஞ்ஞான விந்தைகள் மலிந்தது. நவீன தொழில் நுட்பங்கள் சூழ்ந்தது. உலகத்தை அறிய அவாவுறும் குழந்தைக்கு வழிகாட்ட வேண்டியவர்கள் நாம்தான்.

உயிரற்ற றோபோக்கள் உலாவரும் இந்நாட்களில் மனித உணர்வுகளை குழந்தைகளது உள்ளங்களில் வளர்க்க வேண்டும். நலிந்து போகும் மனித நேயத்தை வளர்த்தெடுக்க வேண்டும். அதற்கு வகுப்பறைகள்தான் பொருத்தமான இடம். ஆசிரியர்கள்தான் பொருத்தமானவர்கள். இதனை ஆசிரியர் உலகம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மாணவர்களை ஈர்த்தெடுக்க இரு வழிகள் உண்டு. ஒன்று கலை, மற்றது விளையாட்டு. இவை இரண்டையும் கையாண்டு கல்வியை முன்னெடுத்துச் சென்று நமது நோக்கை அடையலாம். இவற்றை அடிப்படையாக வைத்தே எனது சிறுவர் இலக்கியங்கள் எழுப்பப்படுகின்றன. பல அதிபர்களும், ஆசிரியர்களும் கற்றவர்களும் சிறுவர் இலக்கியங்களை வரவேற்கின்றனர்.

ஆரம்பக் கல்வியில் ஆர்வம் காட்டும் வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு.சுந்தரம் திவகலாலா அவர்கள் என்றும் நன்றிக்குரியவர்கள். அவர் காட்டும் கரிசனையை சகலரும் புரிந்து செயற்பட வேண்டும். மாணவர்களது ஆளுமைத்தேரை முன்னேற்ற அனைவரும் வடம் பிடிக்க வேண்டும் என்று கூறிச் செயற்படத் தூண்டும் அவருக்கு எனது இதயத்தால் நன்றி நவில்கிறேன்.

இந்நூலைப் படித்து அணிந்துரை தந்திருப்பவர் பிரபல எழுத்தாளரும் கலைஞரும் மத்திய கல்வி உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலாளருமாகிய திரு.எஸ். தில்லைநடராஜா அவர்கள். கல்வியிலும் மாணவர் உலகிலும், அவர்தம் வளர்ச்சியிலும் கரிசனை காட்டுபவர். எனது நூல்களின் பின்னட்டையில் பலர் கருத்துரை வழங்குவர். இந்நூலுக்கு திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி அதிபர் திரு.எஸ்.தண்டாயுதபாணி எழுதியுள்ளார். அன்பும், ஆழ்ந்த புலமையும், அடக்கமும், கல்வியில் நாட்டமும், மாணவர் வளர்ச்சியில் கரிசனையும் உடைய அவருக்கும்,

அட்டைப்படத்தோடு, அழகிய ஓவியங்களை வரைந்து, நூலாக்கப் பணியில் எனது மகன் திரு.ச.அ.அருள்பாஸ்கரன் ஈடுபடுகிறார். கணணி எழுத்தாக்கப் பணியில் திரு.எஸ். இராசதுரை அவர்களும் திருமதி. நிரஞ்சனா கைலாசன் அவர்களும் உதவியுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் நன்றிகள். நூலை வாங்கிப் படிக்கும் ஆசிரியர்களும், மாணவர்களும் நன்றிக்குரியவர்கள். இந்நூல் ஒரு வகையில் ஒரு பயிற்சி நூலாகும். இதில் காணப்படும் படங்களுக்கு நிறந்தீட்டும்படி மாணவர்களை ஊக்கமூட்டுங்கள். அவர்கள் ஆர்வத்தோடு செயற்பட்டு மகிழ்வார்கள்.

நன்றி

ஆலங்கேணி
கிண்ணியா

ச.அருளானந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே.......


01. பட்டம் கட்டி ஆடுவோம்
02. பட்டம் விடும் போட்டி
03. அழகு பொங்கும் வீடு
04. எங்கள் குடும்பம்
05. வீட்டுத்தோட்டத்திலே
06. தபாற்காரர் வருகிறார்
07. சுத்தம் பேணுவோம்
08. எலி விளையாட்டு
09. சிட்டுக்குருவிபோல
10. காய்கறி
11. நீர் விளையாட்டு
12. ஆடிப்பாடுவோம்
13. சேர்ந்து வாழுவோம்
14. மெல்ல காற்று வீசும்
15. நாம் ஊஞ்சல் ஆடுவோம்
16. பூவைப் பாருங்கள்
17. கொண்டைக் கிளார் கூடு
18. பள்ளி வாழ்க்கையிலே
19. மேகந் திரண்டு வருவதைப் பார்
20. வாலை வாலை ஆட்டும்
21. சின்னச் சின்ன ரோஜாவே
22. அணிலும் ஆந்தையும்
23. எங்கள் அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம் கட்டி ஆடுவோம்



பட்டம் ஒன்று கட்டுவோம்
பறக்க விட்டுக் காட்டுவோம்
எட்டு மூலைப் பட்டத்தை
ஏற்றி விளை யாடுவோம்...

மயிலைப் போல பட்டமாம்
வண்டு போன்ற பட்டமாம்
குயிலைப் போன்று வானிலே
கூவும் விண்ணும் கட்டுவோம்


வண்ணத் தாளை வெட்டுவோம்
வெட்டி அளவாய் ஒட்டுவோம்
கண்ணைப் பறிக்கும் நிறத்திலே
கட்டிப் பட்டம் ஏற்றுவோம்

நூலைக் கட்டிக் கொள்ளுவோம்
நுனியைப் பிடித்துக் கொள்ளுவோம்
வாலை ஆட்டிப் பட்டமும்
வடிவாய் காற்றில் பறக்குதாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம் விடும் போட்டி



பென்னம் பெரிய வெளியிலே
பட்டம் விடும் போட்டியாம்
அன்னம் போல பட்டங்கள்
ஆடி வானில் பறக்குது

ஆளுக் கொரு கையிலே
ஆடும் பட்டம் வானிலே
நூலைக் கையில் ஏந்தியே
நீட்டி இழுத்துப் பிடிக்கிறார்


வால் தொலைத்த பட்டங்கள்
வட்டம் அடித்துச் சுழலுது
நூல் அறுந்த பட்டங்கள்
நூறு மீற்றர் போகுது

வானம் நிறைந்து பட்டமாய்
வண்ணக் காட்சி காட்டுது
வானைப் பார்த்துக் கூட்டமாய்
வந்து மக்கள் ரசிக்கிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு பொங்கும் வீடு



அழகு பொங்கும் வீடு - எங்கள்
அப்பா தந்த வீடு
பழகி வாழும் வீடு - எம்மை
பாது காக்கும் வீடு

மெல்லக் காற்று வந்து - எங்கள்
மேனி தொட்டுப் போக
நல்ல யன்னல் கதவும் - சுற்றி
நாலு பக்கம் உண்டு

அப்பா வெளியில் போனால் - எங்கள்
ஆட்சி நடக்கும் வீடு
அப்பா தந்த செல்வம் - இது
அம்மா வாழும் இல்லம்



வெள்ளைச் சுவரின் மேலே - எம்
வண்ணப் படங்கள் ஓடும்
கள்ளத் தீனி எடுத்து - நாங்கள்
களித்து உண்ணும் வீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் குடும்பம்



எங்கள் இன்பக் குடும்பம் – அதை
எண்ணும் போதும் இன்பம்
தங்கத் தாத்தா தலைமை – இனிது
தாங்கும் எங்கள் குடும்பம்

உழைத்து வருவார் அப்பா – அன்பு
ஊட்டி வளர்ப்பார் அம்மா
அழைக்க மாமா மாமி – வந்து
அன்பாய் முன்னே நிற்பார்

சின்னச் சின்ன கதைகள் – தினம்
சேர்த்துப் பாட்டி சொல்வார்
அண்ணன் தம்பி அக்கா – சேர்ந்து
ஆடி வாழும் குடும்பம்

ஒன்று சேர்ந்து வாழ்ந்தால் – இந்த
உலகில் பெருமை பெறலாம்
என்று சொல்லும் பெரியோர் – இங்கு
இணைந்து வாழும் குடும்பம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வீட்டுத் தோட்டத்திலே

எங்கள் வீட்டுத் தோட்டம் ~ அதில்
எங்கும் பயிரின் ஆட்டம்
பொங்கி மனதைக் கிள்ளும் ~ அதைப்
பார்த்து பார்த்துத் துள்ளும்


தென்னை குலையோ டாடும் ~ அருகே
தேன் பலாவும் கூடும்
தின்ன இனிக்கும் மாங்கனி ~ நாவல்
தந்தே நிற்கும் தேங்கனி

வாழை கொய்யா மாதுளை ~ நித்தம்
வழங்கும் தோடை தேன்சுளை
பாளை தொங்கும் கமுகிலே ~ பனையின்
பழமும் சொரியும் தரையிலே

வண்ணப் பூக்கள் கூத்திடும் ~ வண்டு
வட்டம் அடித்துப் பார்த்திடும்
மின்னும் சின்னப் பூக்களும் ~ மெல்ல
மேலே எட்டி நிமிர்ந்திடும்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபாற்காரர் வருகிறார்



தபால் காரர் வருகிறார்
சைக்கிள் மணி அடிக்கிறார்
தபால் தபால் நீட்டுறார்
தந்து சிரித்துச் செல்கிறார்

பள்ளி செல்லும் பிள்ளைக்கும்
பாடம் சொல்லும் குருவுக்கும்
சொல்லி வைத்த நேரத்தில்
செய்தி தன்னைச் சேர்க்கிறார்

காக்கிச் சட்டை தொப்பியும்
கடிதம் சுமக்கும் செய்தியும்
தூக்கிச் சென்று தருகிறார்
சேவை செய்து திரிகிறார்

தூர இடத்துச் செய்தியை
சுமந்து வரும் அஞ்சலை
நேரம் பார்த்துச் சேர்த்திடும்
நேர்மை கொண்ட சேவகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்தம் பேணுவோம்

குனிந்து குப்பை அகற்றுவோம்
கூட்டிச் சுத்தம் பேணுவோம்
கனிந்து வேலை செய்தலே
கடமை என்று போற்றுவோம்

சேர்ந்து வாழும் இடமெலாம்
சுத்தம் செய்து வைத்திடில்
ஊர்ந்து சேரும் நோய்நொடி
ஓடி மறைந்து போய்விடும்

தூய்மை செய்த ஆடையை
தொடர்ந்து உடுக்கப் பழகுவோம்
நோய்கள் இன்றி வாழ்தலே
நாட்டின் செல்வம் பாடுவோம்

கொதித்துக் குளிர்ந்த நீரையே
குடிக்க வேண்டும் கேளுங்கள்
குதித்து உடலைப் பேணினால்
கோடி காலம் வாழலாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலி விளையாட்டு



சின்ன எலிகள் கூடி - மெல்லச்
சீண்டித் துள்ளி ஆடி
முன்னும் பின்னும் ஓடி - அவை
மகிழ்ந்து மோதும் சாடி

அரிசி பருப்புத் தேடும் - பரந்து
அலைந்து திரிந்து ஓடும்
அரிசிப் பானை உருளும் - எலி
அடுக் களையுள் சுருளும்

மெல்ல இருளும் பரவும் - எலிகள்
மகிழ்ந்து குலவிப் பிரியும்
செல்லப் பூனை பதுங்கும் - மூலை
பார்த்து எலியும் நடுங்கும்

பூனை பாய்ந்து சேரும் - கண்
பிதுங்க எலியும் பாயும்
பானை சட்டி புரளும் - அம்மா
பார்த்து விழிகள் மிரளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்டுக் குருவிபோல

கூடு கட்டக் குருவிக்குயார்
சொல்லிக் கொடுத்தது
கூடி வானில் பறக்கயாரோ
கற்றுக் கொடுத்தது

சோடி சேர்ந்து வாழயாரோ
சொல்லித் தந்தது
தேடி உணவை உண்ணயாரோ
காட்டித் தந்தது



கிழக்கு வெளிக்கும் முன்னேகுருவி
களித்துப் பாடுது
விளக்கு வைக்கும் முன்னேகூடு
விரைந்து செல்லுது

முட்டை இட்டுக் குஞ்சுபொரித்து
மகிழ்ந்து வாழுது
சிட்டுக் குருவி போல நாமும்
சேர்ந்து வாழுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய்கறி



நிலத்தில் பாத்தி கட்டுவோம்
நீரை அதற்குள் ஊற்றுவோம்
கிளறி விதையை ஊன்றுவோம்
கணித்து நாளை எண்ணுவோம்

சின்னச் சின்ன முளைகளும்
சிரித்து எட்டிப் பார்த்திடும்
தண்ணீர் விட்டு அளவுடன்
தினமும் காவல் செய்குவோம்


செடியும் வளர்ந்து பூத்திடும்
சிறிது நாளில் காய்த்திடும்
கொடியும் படர்ந்து வளர்ந்திடும்
கொத்தாய் காய்கள் தொங்கிடும்

தோட்டம் நிறைந்து காய்கறி
துள்ள வைத்துக் கூத்திடும்
ஊட்டம் உள்ள உணவுகள்
உண்ணத் தந்து காத்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் விளையாட்டு



வானம் இருண்டு வந்தது
மழையும் பொழிந்து ஓய்ந்தது
கானல் ஓடி மறைந்தது
கசிந்து ஈரம் உறைந்தது


வெள்ளம் ஆறாய் பாய்ந்தது
மண்ணும் இரைந்து ஓய்ந்தது
வெள்ளைத் தாளில் கப்பல்கள்
விரைந்து சிறுவர் செய்தனர்

ஓடி எடுத்து வந்தனர்
ஒன்றாய் நீரில் விட்டனர்
ஆடி ஆடிக் கப்பல்கள்
அசைந்து மிதக்கக் கண்டனர்

புல்லை அதனுள் போட்டனர்
படகு போலே மிதந்தது
கல்லை நிரப்பிப் பார்த்தனர்
கப்பல் நீருள் ஆழ்ந்தது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆடிப் பாடுவோம்





அன்பை அம்மா ஊட்டுவார்
அறிவை அப்பா காட்டுவார்
அண்ணா காவல் செய்குவான்
அக்கா அணைத்துக் கொள்ளுவாள்

பாடம் சொல்லித் தந்தவர்
பாரில் தெய்வம் போற்றுவோம்
ஆடல் பாடல் யாவையும்
அறிந்து கற்கத் தேடுவோம்



உண்மை பேசி உயருவோம்
உறவைப் பெருக்கி வாழுவோம்
எண்ணத் தெளிவை பெற்றிடில்
எடுத்த செயலை முடிக்கலாம்

சோம்பல் தன்னை விரட்டுவோம்
சுழன்று சேவை செய்குவோம்
ஆம்பல் போல மகிழ்ந்துமே
ஆடி ஆடிப் பாடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர்ந்து வாழ்வோம்



சின்னத் தம்பி பார்க்கிறான்
சேர்ந்து ஆட வருகிறான்
அன்பால் அவனை ஆளுவோம்
அணைத்து ஒன்றாய் வாழுவோம்


உயிர்கள் அனைத்தும் தோழர்கள்
உறவு பூண்டு வாழுவோம்
பயின்ற கல்விப் பயனதால்
பயன் அடைந்து மகிழுவோம்

இந்து இஸ்லாம் பௌத்தமும்
இனிய கிறிஸ்த்து வேதமும்
சொந்தம் மனித உயிருக்கே
சண்டை இதிலேன் நமக்குள்ளே

அரிதாம் மனிதப் பிறவியாம்
அன்பே இன்ப ஊற்றதாம்
பெரியோர் சொல்லைக் கேட்டுமே
பெருமை பெற்று வாழுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்லக் காற்று வீசும்



மெல்லக் காற்று வீசும் - எங்கள்
மேனி தொட்டுப் போகும்
செல்லம் என்று கிள்ளும் - உடல்
சுகம் தழுவிக் கொள்ளும்

கட்டி அணைத்துச் சொல்லும் - நம்
காதில் ஊதிச் செல்லும்
முட்டி ஆடும் தென்னை - அந்த
மழைக்கும் காற்றே அன்னை

மூக்கு வழியால் காற்று - நம்
மூச்சுப் பைக்குள் போகும்
காக்கும் உயிரைக் காற்று - அதில்
காணும் தூய்மை போற்று

சுத்தம் உள்ள காற்று - நமக்கு
சுகத்தைத் தந்து போற்றும்
சுத்தம் சூழல் கண்டால் - நம்
சுற்றம் நீடு வாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் ஊஞ்சல் ஆடுவோம்

ஊஞ்சல் ஆடுவோம் – நாம்
ஊஞ்சல் ஆடுவோம்
உந்தி உந்தி ஆடி – எம்
உள்ளம் மகிழ்ந்து பாடி
(ஊஞ்சலாடுவோம்.....

அம்மா அப்பா பாட – எங்கள்
அண்ணா தாளம் போட
தம்பி சேர்ந்து ஆட – பக்கம்
தங்கை துள்ளிப் பாய
(ஊஞ்சலாடுவோம்...

மாமி மாமா வாழ்த்த – மக்கள்
மனது குளிர வேண்டும்
பூமி செழிக்க மழையும் – கொட்ட
பாட்டுப் பாட வேண்டும்.
(ஊஞ்சலாடுவோம்......

நாடு வாழ வேண்டும் – இங்கு
நல்ல மனிதர் வேண்டும்
தேடு கல்வி தன்னை – இந்த
தேசம் காண வேண்டும்
(ஊஞ்சலாடுவோம்.......






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவைப் பாருங்கள்



அல்லிப் பூவைப் பாருங்கள் - அதன்
அழகு இதழைப் பாருங்கள்
சொல்லிச் சொல்லிப் பாடுங்கள் - அதை
தொட்டு மணந்து பாருங்கள்




வெள்ளை நிறத்துப் பூக்கள் - இரவில்
விரிந்து மனதைப் பறிக்கும்
அள்ளும் வண்ணப் பூக்கள் - பகலில்
அலர்ந்து காற்றை வெறிக்கும்



வாசம் உள்ள பூக்களும் - பல
வண்ண நிறத்துப் பூக்களும்
ஈசன் விரும்பும் பூக்களே - அவர்க்கு
ஏதும் பேதம் இல்லையாம்

சின்னப் பூக்கள் நாங்களே - ஈசன்
சிந்தி விட்ட பூக்களாம்
அன்பு கொண்டு வாழுவோம் - சேர்ந்து
ஆடி ஆடிப் பாடுவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொண்டைக் கிளார் கூடு



கொண்டைக் கிளார் கூடு ~ அதில்
கூடும் பறவை பாரு
சண்டை அங்கு உண்டா ~ சிறு
சச்ச ரவும் உண்டா



கூடி இரண்டும் ஒன்றாய் ~ தினம்
குலவிக் குலவிப் பாடி
ஆடிப் பறந்து சேர்ந்து ~ வானில்
அன்பு கொண்டு வாழும்

கூடு சேர்ந்து கட்டி ~ அளவாய்
குஞ்சு பொரித்து வாழ்ந்து
தேடும் சுகமோ பெரிது ~ இதை
தெரிந்து கொண்டு வாழ்வோம்

தீங்கு செய்வ தில்லை ~ யார்க்கும்
தீமை நினைப்ப தில்லை
வாங்கும் உயிரை மட்டும் ~ இந்த
மனிதர் செய்தல் ஏனோ....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி வாழ்க்கையிலே

காலை பள்ளிக்கு வருவோமே
கடவுளை வணங்கிப் படிப்போமே
மாலையில் ஆடி மகிழ்வோமே
மனதைப் பழக்கிக் கொள்வோமே




குரங்கு பாயும் குயில் பாடும்
கோல மயிலும் களித்தாடும்
மரமும் மலரும் நம் தோழர்
மாடும் ஆடும் கூட்டாளி

பாம்பு பக்கம் வந்தாடும்
பாயும் புலியும் சேர்ந்தாடும்
சோம்பல் இல்லை சொர்க்கம் தான்
சேரும் பள்ளி வாழ்க்கையிலே

நிம்மதி பள்ளியிற் தானுண்டு
நீடு வாழவும் வழியுண்டு
நம்பிக்கை ஒன்றே துணையாகும்
நல்லவை செய்து உயர்வோமே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மேகம் திரண்டு வருவதைப் பார்

மேகம் திரண்டு வருவதைப் பார் – மெல்ல
மேலே எழுந்து திரள்வதைப் பார்
தாகம் கொண்ட மரஞ்செடி பார் – அவை
தவித்து வாடிச் சோர்வதைப் பார்

குளிர்ந்து காற்று வீசுது பார் – மரம்
கண்டு மகிழ்வால் ஆடுது பார்
சிலிர்த்து மழையும் பொழியுது பார் – வானம்
சிரித்து மின்னல் அடிக்குது பார்

நிலத்தில் நீரும் ஓடுது பார் – அது
நிலத்தின் நிறத்தில் கலக்குது பார்
குளித்து மரஞ்செடி குனியுது பார் – காகம்
கொப்பில் இருந்து குளிப்பதைப் பார்

குளத்தில் மழைநீர் சேருது பார் – நம்
கிணறும் நிரம்பி வழியுது பார்
விளையும் பயிருக்கு மழை வேண்டும் – எந்த
வாழ்வும் வளமுற மழை வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாலை வாலை ஆட்டும்



வாலை வாலை ஆட்டும்
வளைந்து முகத்தை நீட்டும்
காலை மடித்துக் கெஞ்சும்
கரணம் அடித்துக் கொஞ்சும்


முன்னங் காலைத் தூக்கும்
முன்னால் பாய்ந்து குரைக்கும்
பின்னங் காலால் நடக்கும்
பெரிய வித்தைகள் காட்டும்

எறியும் பந்தையும் கௌவும்
எடுக்க உதவியும் செய்யும்
பறித்துக் கொண்டுமே ஓடும்
பதுங்கி வந்துமே சேரும்

நல்ல நண்பனாம் நாய்தான்
நாளும் வீட்டைக் காக்கும்
கள்வர் தொல்லைகள் இல்லை
கவலைகள் நமக்கும் இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னச் சின்ன ரோஜாவே



சின்னச் சின்ன ரோஜாவே
சிரிக்கும் வண்ண ராஜாவே
கண்ணின் ஒளியே ஓடிவா
கரும்பே தேனே ஆடிவா

வண்ணச் சட்டை போட்டுமே
வந்து நிற்கும் சிட்டுநீ
உன்னை வாழ்த்தி உலகமே
உறுதி கொண்டு நம்பணும்

மண்ணில் அன்பு மலரணும்
மனதில் தூய்மை விரியணும்
அன்பால் உலகை ஆளணும்
அறிவால் உயர்ந்து வாழணும்

ஓடிப் பாடி ஆடுவோம்
ஒன்றாய் சேர்ந்து பாடுவோம்
கூடிப் பாடி ஆடவா
கொடுப்புள் சிரித்து ஓடி வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அணிலும் ஆந்தையும்

அணில் ஒன்று திரிவதை
ஆந்தை இருந்து கண்டது
இனிய உணவு இன்றென
ஈர்க்கும் கண்ணால் பார்த்தது

உணவு கொள்ளும் நேரமோ
ஊர்ந்து ஊர்ந்து வந்தது
எனது வயிற்றில் பசியில்லை
ஏனேன் என்று கேட்டது

ஐயர் வந்து மரத்தின் கீழ்
ஒதுங்கி இருந்து பார்த்தனர்
ஓய்ந்து இருந்த காற்றுமே
ஔவை பெயரைச் சொன்னது

மரத்தின் கிளையில் அணிலையும்
மரத்தின் பொந்தில் ஆந்தையும்
இருக்கக் கண்ட ஐயரின்
இதயம் என்ன நினைத்ததோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபர்

எங்கள் அதிபர் வருகிறார்
எழுந்து வணக்கம் சொல்லுவோம்
பொங்கும் அவரின் சிரிப்பிலே
புதிய நாளைத் தொடங்குவோம்

பிரம்பு கையில் இல்லையாம்
பேச்சும் ஏச்சும் இல்லையாம்
அரும்பும் கனிவு முகத்திலே
அவர்தான் எங்கள் அதிபராம்

திறந்த வெளியில் ஆடுவோம்
சேர்ந்து அதிபர் பாடுவார்
சிறந்த அறிவு பெற்றிட
செயல் முறையில் பயிற்றுவார்

அன்பாய் வாழ்த்துக் கூறுவார்
அறிவின் வழியும் காட்டுவார்
என்றும் அன்பாய் வாழவே
இனிய விழியால் வாழ்த்துவார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலாசிரியர் ..............................



திரு. ச. அருளானந்தம், ஒரு நாடறிந்த சிறுவர் இலக்கிய கர்த்தா. சிறந்த கவிஞரான இவர் சிறுவர்களுக்கான கதைகளையும், பாடல்களையும் ஆக்கியளிப்பதில் வல்லவராகத் திகழ்கின்றார். இன்று ஈழத்தின் தலைசிறந்த சிறுவர் இலக்கியப் படைப்பாளி என்று சொல்லும் அளவுக்கு குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்குமான அறிவுபூர்வமானதும், கவர்ச்சி மிக்கதுமான படைப்புகளை ஆக்கியளித்துக் கொண்டிருக்கின்றார்.

இவர் ஒரு சிறந்த சிறுவர் இலக்கியக் கர்த்தாவாகத் திகழ்வதற்கு இவரது ஆசிரிய வாழ்க்கையே அடித்தளமிட்டிருக்கலாம் என நம்புகிறேன். ஆசிரியராகவும், பாடசாலை அதிபராகவும் நீண்டகாலம் பணியாற்றிய காரணத்தினால் சிறுவர்களின் மனப்போக்குகள், உள்மனஆசைகள் அவர்களது தேவைகள், முரண்பாடுகள் என்பன பற்றியெல்லாம் பரிச்சயப்பட்டுப் போன காரணத்தினாலேயே அவர்களுக்கியைந்ததான இரசனை மிக்க பாடல்களையும் கதைகளையும் இவரால் சிறப்பாகப் படைக்க முடிகின்றது.

இவரது பாட்ல்களை சிறுவர்கள் பாடும் போது குதூகலமும், மகிழ்சியும் இயல்பாகவே தோன்றுவதை உணரலாம். வெறும் ஓசை நயம் மாத்திரமல்லாமல் பிள்ளைகளின் ஆளுமை உருவாக்கத்திற்குத் தேவையான நல்ல பழக்கவழக்கங்களையும், மனப்பான்மையையும் மறைமுகமாக விதைத்து விடுகின்ற ஒரு பண்பையும் இவரது பாடல்களிலும் கதைகளிலும் காண முடியும்.

'சின்ன சின்னப் பாட்டு' என்ற இச் சிறுவர் பாடல்கள் படிக்கப் படிக்க இனிக்கும் பாடல்களாக சிறுவர் மனத்தை கொள்ளை கொள்ளும் வகையில் அமைந்துள்ளன. அத்துடன் ஆரம்பக் கல்விப் பாடத்திட்டத்திற்கு அமைவாக இருப்பதால் பாடசாலைகளில் பயன்படுத்தச் சிறந்த துணை நூலாகவும் அமைந்துள்ளது. பெற்றோர்களும், ஆசிரியர்களும் இவரது படைப்புகளை சிறுவர் மத்தியில் கொண்டு செல்ல உதவ வேண்டும்.

சிறுவர் இலக்கியப் படைப்பாளிகளுக்கு பஞ்சம் நிலவும் இந்நாட்டில் திரு. அருளானந்தம் அவர்கள் மேலும் பல சிறுவர் இலக்கியங்களை படைக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

***இ. கி. மி. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி***
***திருக்கோணமலை.***

***சி. தண்டாயுதபாணி***
***அதிபர்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org